நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம்: இடைநிலை

**December 2006**

வினாக்கள் : 50

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள்

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**Read “மகாகவி பாரதியார்” and answer questions 1 to 5.**
**“மகாகவி பாரதியார்” என்பதை வாசித்து 1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

## மகாகவி பாரதியார்

காலம் தந்த கவிஞனும், காலத்தை வென்ற கவிஞனும் மகாகவி பாரதியாவார். தமிழிலே ஒரு பெரிய மறுமலர்ச்சியையும், விழிப்புணர்வையும் உண்டாக்கியவர் பாரதியார்.

இவர் 1882-ம் ஆண்டு எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும், லட்சுமி அம்மாவுக்கும் மகனாக பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் சுப்பையா. இவர் எட்டயபுரம் அரண்மனையில் ஜமீன்தார் முன்பாகக் கவிபாடி ‘பாரதி’ என்ற பட்டம் பெற்றார். பாரதிக்கு பதினான்கு வயது நடந்து கொண்டிருந்தபோது செல்லம்மாள் என்ற ஏழு வயதுப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர்.

பெண்கல்வி, தேச விடுதலை, பகுத்தறிவு வாதம், மனித சமத்துவம் குறித்து பாடல்களை எழுதிக் குவித்த வண்ணமிருந்தார் பாரதி. பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு போன்ற பாடல்கள் இவரின் கவிதைப் புலமைக்குச் சான்றுகளாகும். இந்திய நாட்டின் பழங்காலப் பெருமைகளையும், உயர்வையும் கேட்போர் செவிகளில் தேனூறப் பாடியுள்ளார். அத்தோடு பல தெய்வ, பக்திப் பாடல்களையும் பாடி படைப்பாற்றலின் இமயமாக விளங்கினார்.

தமிழில் பாரதி தொடாத, தொடங்கி வைக்காத இலக்கியத்துறையே இல்லை என மதிப்பிடலாம். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும், தாய் நாட்டின் எழுச்சிக்கும் தனது சக்தி மிகுந்த கவிதைகளை அர்ப்பணித்த மகாகவி பாரதி 1921-ம் ஆண்டு புகழுடம்பு எய்தினார்.

Choose the correct answer.
சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. “பாரதி” என்ற பட்டம் யாரால் கொடுக்கப்பட்டது?

அடுத்த பக்கத்தில் தொடரும்.

(a) காந்திஜி
(b) சின்னச்சாமி ஐயர்
(c) எட்டயபுரம் ஜமீன்தார்
(d) செல்லம்மாள்

2. பாரதி எழுதிய பாடல்கள்:

(a) பெண்கல்வி
(b) தேசவிடுதலை
(c) பகுத்தறிவு வாதம்
(d) மேற்கூறிய மூன்றையும், பற்றியன.

3. பாரதி பிறந்த நாடு:

(a) இலங்கை
(b) தென் ஆபிரிக்கா
(c) பாகிஸ்தான்
(d) இந்தியா

4. செல்லம்மாளுக்கு திருமணமாகும் போது எத்தனை வயது?

(a) பதினான்கு
(b) ஏழு
(c) இருபது
(d) பதினெட்டு

5. பாரதியார் எழுதிய

(a) திருக்குறள்
(b) ஆத்திசூடி
(c) பாஞ்சாலி சபதம்
(d) சிலப்பதிகாரம்

அவரின் கவிதைத் திறமைக்கு ஒரு சான்று.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**Read the poem “ஆறு” & answer questions 6 to 10**
**“ஆறு” என்ற பாடலை வாசித்து அதில் உள்ள தகவல்களைக் கொண்டு 6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**ஆறு**

உச்சி மலை ஊசி மலை
உயர்ந்த மலை மீதிலே
மிச்சம் விசையாகத் தண்ணீர்
மேல் எழுந்து கொட்டுதே!

கல்லிற் பாய்ந்து கரை புரண்டு
கடலை நோக்கி ஓடியே
மெல்ல நாட்டை வளப்படுத்தி
மெத்த நன்மை செய்குதே!

ஆறு இல்லா ஊருக்கொரு
அழகு இல்லை என்றுமே
கூறி வைத்த ஔவைப்பாட்டி
கூற்று என்றும் உண்மையே!

ஆற்றை அசுத்தம் செய்து நாளும்
அதிலே நஞ்சைக் கலக்கினால்
நேற்று வரை இருந்த அழகு
நீங்கி வரட்சி காட்டுமே!

6. இந்த பாடலில் குறிப்பிடப்படாத மலை எது?
   (a) ஊசி மலை
   (b) இமய மலை
   (c) உச்சி மலை
   (d) உயர்ந்த மலை

7. “வளப்படுத்தி” என்பதன் பொருள்?
   (a) அழித்து
   (b) மூழ்கடித்து
   (c) செழிக்க வைத்து
   (d) எரித்து

8. ஆற்றைப்பற்றி ஔவைப்பாட்டி என்ன கூறுகிறார்?
   (a) ஆறிலும் சாவு, நூறிலும் சாவு.
   (b) ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
   (c) ஆறு இல்லா ஊருக்கு அழகில்லை.
   (d) ஆறு மனமே ஆறு.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

9. இந்தப் பாடல் நமக்கு சொல்லும் அறிவுரை என்ன?
   (a) நாம் ஆற்றை அழகாக வைத்திருக்க வேண்டும்.
   (b) நாம் குப்பைகளை ஆற்றுக்குள் கொட்ட வேண்டும்.
   (c) நாம் ஆற்றங்கரையில் விளையாட வேண்டும்.
   (d) நாம் ஆற்றை அசுத்தம் செய்யக் கூடாது.

10. ஆறு அசுத்தமடைந்தால் என்ன நடக்கும்?
   (a) நாட்டின் அழகு கெடும்.
   (b) நாட்டில் வரட்சி ஏற்படும்.
   (c) நாட்டின் வளம் கெட்டுப் போகும்.
   (d) மேற்கூறிய மூன்றும் ஏற்படும்.

## For questions 11 to 15 choose the word that is spelt incorrectly in the given sentence.

**11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் உள்ள சொற்களுள் பிழையாக எழுதப்பட்டுள்ள சொல்லைக் காட்டுக.**

11. குறுடன் ஒருவன் வீதி ஓரத்தில் இருந்தான்.
   (a) வீதி
   (b) குறுடன்
   (c) ஓரத்தில்
   (d) இருந்தான்

12. அகத்தின் அலகு முகத்தில் தெரியும்.
   (a) அகத்தின்
   (b) அலகு
   (c) முகத்தில்
   (d) தெரியும்

13. அவுஸ்திரேலியா கடள் சூழ்ந்த நாடு.
   (a) கடள்
   (b) அவுஸ்திரேலியா
   (c) சூழ்ந்த
   (d) நாடு

14. நான் மிருதங்கம் மிகவும் நன்ராக வாசிப்பேன்.
   (a) வாசிப்பேன்
   (b) நன்ராக
   (c) மிருதங்கம்
   (d) மிகவும்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

15. எனக்கு தமிழ் எலுதவும் பேசவும் தெரியும்.
   (a) எலுதவும்
   (b) தெரியும்
   (c) பேசவும்
   (d) எனக்கு

## For questions 16 to 20 show the correct spelling of the underlined word that is spelt incorrectly.

**16 முதல் - 20 வரையுள்ள வினாக்களில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொல் பிழையாக (தப்பாக) எழுதப்பட்டுள்ளது. அதை சரியாக எழுதுவது எப்படியெனக் காட்டுங்கள்.**

16. <u>மன்சரிவு</u> ஏற்பட்டு மக்கள் இறந்தார்கள்.
   (a) மன்சறிவு
   (b) மண்சறிவு
   (c) மாண்சரிவு
   (d) மண்சரிவு

17. உலகில் அன்பும், <u>சமதானமும்</u> வளர வேண்டும்.
   (a) சமாதாணமும்
   (b) சமாதானமும்
   (c) சமதாணமும்
   (d) சமதனமும்

18. ஆறுமுக நாவலர் பைபிளை தமிழில் <u>மொளிபெயர்த்தார்</u>.
   (a) மொலிபெயர்த்தார்
   (b) மொளிபேயர்த்தார்
   (c) மொழிபெயர்த்தார்
   (d) மொழிபேயர்த்தார்

19. நாங்கள் மாமாவின் வீட்டில் பந்து <u>விலையாடினோம்</u>.
   (a) விளாடினோம்
   (b) விளையாடினோம்
   (c) விலாடினோம்
   (d) விழையாடினோம்

20. தமிழ்நாடு தமிழரின் <u>பாறம்பரிய</u> பிரதேசம் ஆகும்.
   (a) பாரம்பறிய
   (b) பாறம்பறிய
   (c) பராம்பரிய
   (d) பாரம்பரிய

**For questions 21 to 25 choose the word that is closest in meaning to the underlined word.**

**21 முதல் 25 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு மிகவும் பொருத்தமான சொல்லைக் காட்டுக.**

21. அமைச்சர்கள் ஆசனத்தில் <u>அமர்ந்தனர்</u>.

    (a) நின்றனர்
    (b) இருந்தனர்
    (c) படுத்தனர்
    (d) குதித்தனர்

22. விழாவின் <u>ஆரம்ப</u> உரை நன்றாயிருந்தது.

    (a) தொடக்க
    (b) நன்றி
    (c) இறுதி
    (d) தலைமை

23. ஆசிரியரின் <u>கேள்வி</u> அந்த மாணவனுக்கு விளங்கவில்லை.

    (a) விளக்கம்
    (b) பதில்
    (c) பாடம்
    (d) வினா

24. விபத்தில் மாணவர்கள் இறந்ததைக் கேள்வியுற்றோர் <u>கவலை</u> அடைந்தார்கள்.

    (a) ஆத்திரம்
    (b) மகிழ்ச்சி
    (c) உவகை
    (d) துக்கம்

25. பத்து <u>ஆண்டுகளின்</u> பின் மேட்டூர் அணை நிரம்பியது.

    (a) மாதங்களின்
    (b) வருடங்களின்
    (c) நாட்களின்
    (d) வாரங்களின்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**For questions 26 to 30 choose the word that is opposite in meaning to the underlined word.**

**26 முதல் 35 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு எதிர்க்கருத்துள்ள சொல்லை காட்டுக.**

26. நாள் முழுவதும் பாடுபட்டு உழைத்ததால் கண்ணன் <u>களைப்படைந்தான்</u>.
    - (a) உற்சாகமடைந்தான்
    - (b) கவலையடைந்தான்
    - (c) சோர்வடைந்தான்
    - (d) களிப்படைந்தான்

27. வாழ்க்கைச் <u>செலவு</u> கூடக் கூட மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள்.
    - (a) வரவு
    - (b) இன்பம்
    - (c) பணம்
    - (d) செல்வம்

28. மழை வீழ்ச்சி குறைந்ததால் ஏரிகளில் நீர் மட்டம் <u>குறைவாக</u> இருந்தது.
    - (a) சராசரியாக
    - (b) அளவாக
    - (c) அதிகமாக
    - (d) சொற்பமாக

**For questions 29 and 30 choose the answer that combines the sentences in the best order.**

**வினாக்கள் 29 தொடக்கம் 30 வரை தரப்பட்ட வாக்கியங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக்காட்டுக.**

29. (1) பின் அம்மா அவளை கோவிலுக்குக் கூட்டிக் கொண்டு போனார்.
    (2) அன்று கமலாவின் பிறந்த நாள்.
    (3) கோவிலில் இருந்து வரும் வழியில் பிறந்த நாள் கேக் வாங்கிக் கொண்டு வந்தார்கள்.
    (4) காலை எழுந்ததும் வேலைக்குப் போகும் முன் அப்பா அவளை வாழ்த்தினார்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

(a) (1), (2), (3), (4)
(b) (3), (2), (4), (1)
(c) (2), (1), (4), (3)
(d) (2), (4), (1), (3)

30. (1) அவற்றை விற்று நிறையப் பணம் சம்பாதித்தான்.
(2) அந்த நிலத்தில் காய்கறிகளைப் பயிரிட்டான்.
(3) ராமன் தன் தந்தையின் நிலத்தை கொத்திப் பண்படுத்தினான்.
(4) நிறையக் காய்கறிகள் விளைந்தன.

(a) (3), (2), (4), (1)
(b) (2), (1), (4), (3)
(c) (4), (3), (2), (1)
(d) (1), (4), (3), (2)

## For questions 31 to 33 choose the most appropriate word from the list below the text.

**31 முதல் 33 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட இடத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லை உரைப்பகுதியின் கீழ் தரப்பட்ட சொற்களிலிருந்து தெரிவு செய்க.**

தமிழ் நாடு தமிழரின் பரம்பரைப் பிரதேசம். அங்கு தமிழ் மொழி தமிழர் பண்பாடு தமிழர் (31) ----------------- எல்லாம் அன்று மட்டும் அல்ல இன்றும் வளர்கின்றன. அவை எல்லாம் தமிழரின் (32) --------------------- அளித்த அருஞ்செல்வங்கள்.

தமிழரின் அன்றாட வாழ்விலே அவர்களின் தனித்துவத்தை நாம் காணலாம். உணவு உடை கலைகள் போன்றவை சில. இவை மட்டுமல்ல பேணும் (33) ----------------, வாழ்க்கைமுறை விழாக்கள் திருமணமுறை, மரணச்சடங்கு போன்ற இன்னும் பலவும் தனித்துவமானவை.

அறிஞரைப்போற்றுதல் தமிழர் பண்பு. அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது வள்ளுவர் கோட்டம்.

**(a)** விழுமியங்கள்
**(b)** தனித்துவமானவை
**(c)** கலைகள்
**(d)** முன்னோர்

**For questions 34 to 37 choose the correct appropriate occupation.**
**34 முதல் 37 வரையுள்ள வினாக்களில் கூறப்பட்ட தொழில்களைச் செய்பவருக்குரிய பொருத்தமான பெயரைத் தெரிவு செய்க.**

34. உடைகளைத் தைப்பவர்:

    (a) நடிகர்
    (b) இயக்குனர்
    (c) அஞ்சற்காரர்
    (d) தையற்காரர்

35. சிலை வடிப்பவர்:

    (a) ஓவியர்
    (b) ஆசிரியர்
    (c) சிற்பி
    (d) தச்சர்

36. விமானம் ஓட்டுபவர்:

    (a) விமானி
    (b) சாரதி
    (c) மாலுமி
    (d) ஓட்டுனர்

37. வழக்குகளை விசாரிப்பவர்:

    (a) வக்கீல்
    (b) நீதிபதி
    (c) தலைவர்
    (d) மருத்துவர்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**For questions 38 to 42 choose the most appropriate cities from the list**
**38 முதல் 42 வரையுள்ள வினாக்களில் கூறப்பட்ட விடயங்களுக்குப் பொருத்தமான நகரங்களை தெரிவுசெய்க.**

38. விவேகானந்தர் நினைவு மண்டபம் அமைந்துள்ள இடம் -

39. திருவள்ளுவர் நினைவாகக் கட்டப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டம் -

40. தமிழரின் கலைகள் சிறப்புற்று விளங்கிய இடம் -

41. தமிழ்ச் சங்கம் அமைந்த இடம் -

42. திருவள்ளுவரின் 133 அடி உயரச் சிலை அமைந்துள்ள இடம் -

| |
|---|
| **(a)** கன்னியாகுமரி |
| **(b)** மாமல்லபுரம் |
| **(c)** சென்னை |
| **(d)** மதுரை |

**For questions 43 to 48 choose the most appropriate pharase from the list**
**43 முதல் 46 வினாக்களில் ஆரம்பிக்கும் வரிகளுக்குரிய மறுபாதியைத் தேர்ந்தெடுக்க.**

43. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி

44. எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

46. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்

| |
|---|
| **(a)** பண்பும் பயனும் அது |
| **(b)** வாழிய வாழியவே |
| **(c)** மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு |
| **(d)** சான்றோன் எனக்கேட்ட தாய் |

**For questions 47 -50 choose the most appropriate answer**
**47 முதல் 50 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான பதிலை தெரிவு செய்க.**

47. சிட்னியிலிருந்து வெளிவரும் சஞ்சிகை எது?

(a) விகடன்
(b) குமுதம்
(c) கலப்பை
(d) மஞ்சரி

48. அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவராத பத்திரிகை எது?

(a) ஈழமுரசு
(b) உதயம்
(c) தினகரன்
(d) இவை எதுவுமல்ல.

49. சிட்னியில் தமிழ்ப் பாடநூல்களை வெளியிடுவோர் யார்?

(a) தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு.
(b) தமிழ்ச் சங்கங்களின் இணைப்புக்குழு.
(c) இவை இரண்டும் சரி.
(d) இவை இரண்டும் தவறு.

50. நாம் தமிழ் படிப்பதனால் ஏற்படும் நன்மைகள்

(a) எமது தாய்மொழியை அறிகிறோம்.
(b) எமது பண்பாட்டை அறிகிறோம்.
(c) எமது இனத்தின் சிறப்பை அறிகிறோம்.
(d) இவை எல்லாம் சரி.

இதுவே இறுதிப் பக்கம்.